ஆர்ய தர்மம்.

கும்பகோணத்தில் விளங்காநிற்கும் ஸ்ரீ காஞ்சீகாமகோடி
பீடாதிபதி அவர்களால் அனுக்கிரகிக்கப்பெற்று, ஸ்ரீ மடத்தின்
ஆஸ்தானபண்டிதர் பிரம்மஸ்ரீ பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதி
பூஷண வ. ஸ்வா. வேங்கட்டராம சாஸ்திரிகள்,
ஷை மடத்தின் ஆஸ்தானபண்டிதர் மஹோப
தேசக கவிரத்நம் பிரம்மஸ்ரீ ப. பஞ்சாப
கேச சாஸ்திரிகள் இவர்களால்
பத்திராதிபத்யம் வகிக்கப்பெற்று நடைபெறும்
ஓர் தமிழ் வாராந்தப் பத்திரிகை.

புத்தகம் 10.

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்.

1926.

விஷயங்கள்.

நெ.		பக்கம்
1	ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் முதற்பக்கம் முழுவதும் நீதிமொழிகள் இருக்கின்றன.	
2	பத்தாவதாண்டு	2
3	பருத்தியின்பெருமை	4
4	சிவபெருமானின் மயானவாஸம் விபூதிதாரணம்	7
5	சகோதரமதம் என்றால் என்ன ?	12
6	லௌகிகவிசாரம்	14
7	தீர்த்ததானம் மிகச் சிறந்தது	18, 34, 50
8	உடை உடுத்தல்	20
9	ஓர் அபிப்பிராயம்	26
10	தலையூர் அத்வைத வித்யாசாலை பிரகடனம்	28
11	ரஸக்கொத்து	30
12	ஆசாரம்	32, 40
13	இந்து தேவஸ்தான மசோதா	36
14	பால்யவிவாஹம்	45, 52
15	சிதம்பரம் அத்வைத ஸபை	57, 681
16	மஹாமஹோபாத்தியாயபட்டம்	58
17	ஸுரியான இந்து ஸபை	64
18	வேதாந்த ஸாரம்	66, 82, 98, 114, 130, 146, 162, 178, 194, 210, 226, 242, 258, 274, 354, 370, 402, 418, 434, 450, 466, 482, 498, 514, 530
19	ஜோதிடசாஸ்திர வரலாறு	69
20	ஏன் நாம் வேதகாவ்யம் கற்கவேண்டும் ?	75
21	கலியின் கொடுமையும் காக்கும் வழியும்	77
22	பொதுக்குறிப்புகள்	79
23	தர்மகல்பதரு	85, 110, 376, 484
24	திரைகடலோடியுந் திரவியம் தேடு	87
25	ஸரஸ்வதீமாலா	90
26	அகில இந்திய ஹிந்து மஹாஸபை	96, 101
27	ஹிந்துமத தர்மம்	102,153,181,213,379,388,404,421, 436, 469
28	ஸ்திரீதர்மம்	108, 741, 755
29	சிலகுறிப்புகள்	111
30	இந்து தர்மஸ்தாபன மசோதாவும், பீடாதிபதிகளின்நிலைமையும்	116
31	தீண்டாமையை ஒழித்தல்	132, 217, 249, 639
32	மகாத்மா காந்தியும் வைக்கம் ஸத்தியாக்கிரகமும்	143
33	ராமச்சந்திரபுரத்தில் ஆசார்ய விஜயம்	150

நெ.		பக்கம்
34	வர்ணாச்ரமம்	159, 164
35	வைக்கமும் ஈழுவர்களும்	172, 190, 196
36	மதிப்புரை	187, 208, 270, 495, 520, 569
37	மார்க்கஸஹாயர்	197, 223, 237
38	அகிலபாரதவர்ஷீய பிராமண மஹாசபை	205
39	ஹிந்துமதாபிமான சங்கம்	207
40	வியாஸப்பரிசளிப்பு	208
41	ஸம்ஸ்கிருத வித்தியாப்பியாசம்	228
42	இந்தியா முன்னேற்றமாம் விழியுங்கள்	233, 247, 260
43	தானம்	239, 244
44	ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்	256, 302
45	சண்டாளஜாதிதத்வநிரூபணம்	276, 290, 306, 322, 338 443
46	கர்வம் படைக்கலாகுமா	283
47	காஞ்சீபுரத்தில் ஆசார்ய ஜயந்தி	286, 300
48	கால நிலை	304
49	வேதசாஸ்திரபாடசாலை	314
50	தெய்வங்கள்	316, 410
51	ஸம்ஸ்காரம்	319, 668, 700, 716
52	ருத்திராக்ஷ மகிமை	330, 500
53	அதிர்ஷ்டம்	333
54	உபாகன்மம்	357
55	மதுரைத்தமிழ்ச்சங்கம் வருடோத்ஸவம்	358
56	ஆரோக்யம்	362, 372
57	வியாஸபூஜாமஹோத்ஸவம்	386
58	ஓர் கண்டனக்கூட்டம்	394 675
59	சேர்மாதேவி குருகுலம்	394
60	ரஸமஞ்சரி	396, 416, 430, 447, 463
61	வேதக்கல்வியின் அபிவிருத்தி	414
62	செட்டிக் கப்பலுக்கு செந்தூராந்துணை	428
63	வேதங்கள் அபௌருஷேயமானவை	453, 476, 491, 504
64	ஸ்ரீ காஞ்சீகாமாக்ஷி அம்பாள் ஜீர்ணோத்தாரண ஆரம்ப முகூர்த்தப் பத்திரிகை	460
65	கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமடத்தின் திருப்பணி முகூர்த்தப் பத்திரிகை	462
66	ஆர்யமாணவர்களின் மதவித்யாப்யாஸம்	437, 508
67	நரகசதுர்தசி	517, 588, 599, 606, 646, 652
68	சிதம்பரம் கைர்வாண விநோதினி ஸபா	521

நெ.		பக்கம்
69	மதம்	522
70	வீட்டைப்பார்க்கிலும் வேம்படிமேல்	532
71	கார்த்திகைமாரி (மழை) ஒளித்ததேன்?	535
72	மதாசார்யாளும் அவர்கள் அருளியுள்ள பாஷ்யங்களும்	538
73	ஒரு சங்கை	543, 601, 602, 650, 697
74	ஸ்ரீ ராமாயணபட்டாபிஷேக மஹோத்ஸவம்	544, 618
75	யுக்திவாதம்	556, 572, 604
76	விளையும்பயிர் முளையிலே தெரியும்	558
77	வேதமும் அதன் பிரிவுகளும்	560
78	ஸ்ரீசங்கராசார்ய பாஷ்ய ஸித்தாந்தம்	574
79	ஸ்ரீ ராமாநுஜாசார்ய பாஷ்ய ஸித்தாந்தம்	579
80	லக்ஷார்ச்சனை	582
81	கடன் தொல்லை	583
82	ஸ்ரீ மத்வாசார்ய பாஷ்ய ஸித்தாந்தம்	611, 628
83	ஸ்ரீ விவேக ஸம்வர்த்தினீ ஸபா	616
84	ஸ்ரீ ராகவன் தசரதருக்குச் செய்த உபதேசம்	620, 636, 684
85	காஞ்சீபுரத்தின் மகிமை	622
86	அறிவுடைமை	643, 663
87	விதவாவிவாஹ மகாநாடு	659
88	ஸீதாகல்யாணம்	665
89	ஓர் வேண்டுகோள்	672, 714
90	ஆர்யதர்மாபிவர்த்தினீ ஸபை	674
91	வீண் கவலைவேண்டாம்	676, 687 769
92	கல்பாத்தியில் ரதோத்ஸவம்	690
93	ஸஹபோஜனவிசாரம்	704, 720
94	சேங்காலிபுரம் பஜனைகோஷ்டி	712
95	கிருத்திகா பாநுவார மஹோத்ஸவம்	727
96	குருபக்தி	728, 734
97	பெண்களை மிஷினெரி ஸ்கூலுக்கனுப்புவதாலுண்டாகும் அனர்த்தம்	732, 748, 764,
98	கடவுள்	736, 750
99	ஸ்ரீ சங்கரபகவத்பாத பக்தஜன ஸபை	746
100	ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவப் பத்திரிகை	760
101	விஷ்ணம்பேட்டை தர்மசாஸ்திர ஸபை	761
102	ஸ்நானவிதி	766
103	நவீன சீர்திருத்தம்	772
104	பத்தாவது ஆண்டு நிறைவு	777



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய மஹாசுவாமிகள்.

ருதிரோத்காரி ஹூ)

ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

यद्ग्लानिं परिहर्तुमत्र भुवने जन्म प्रपद्येऽहमि-
त्युच्चैःश्रीभगवान्जगर्ज यदनुष्ठानेन पापं निजम् ।
हत्वा मोक्षमवाप्नुवन्ति विबुधा मन्वादयोऽपि स्वयं
यद्ज्ञानाय कृतीरकार्षुरमला धर्मस्स जीयाच्चिरम् ॥

யாதொரு தர்மத்திற்கு ஏற்படும் அற்பம் குறைவைப் போக்கவேண்டி இவ்வுலகில் நான் ஜன்மாவையடைகிறேனென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கம்பீரமாக கர்ஜித்திருக்கிறாரோ; ஜனங்கள் எந்ததர்மத்தின் அனுஷ்டானத்தினால்தங்களுடைய ஸகலபாபங்களையும் போக்கி என்றுமழிவில்லாத உத்தமசுகஸ்வரூபமான மோக்ஷமென்னும் பரமபுருஷார்த்தத்தை யடைகின்றார்களோ; மனு, யாக்ஞவல்கியர், பராசரர் முதலான மஹரிஷிகள் எந்த தர்மத்தை நன்கறிந்து அனுஷ்டிக்கவேண்டி சிறந்த ஸ்மிருதிகளெனப் பெயர் பூண்ட பல கிரந்தங்களை யியற்றியிருக்கிறார்களோ; அவ்வித மஹிமைபொருந்திய நம் ஸநாதன தர்மமானது நீடூழி காலம் தேசமெங்கும் விளங்கட்டும்.

ஸகலலோகங்களையும் படைத்தாளும் திறமைபெற்ற பகவானான ஸ்ரீ கண்ணபிரான் ஸநாதன தர்மம் செழித்தோங்காமல் எந்த ஸமயம்வாடுகின்றதோ அச்சமயம் நான் அவதரித்து அதை நன்கு விருத்தி செய்கிறேன்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

என்று கீதாசாஸ்திரத்தில் தம் திருவாக்கால் மொழிந்திருக்கிறாரோ; உலகிலுள்ள சகலமானிட வர்க்கங்களும் எந்த தர்மானுஷ்டானத்தால் ஸம்ஸாரமென்னும் கொடிய துன்பத்திற்குக் காரணமான சகல பாபங்களையும் விலக்கி நித்யானந்தரூபமான மோக்ஷஸுகத்தைப் பெறுகின்றார்களோ; கருணா நிதிகளான மஹரிஷிகள் லோகக்ஷேமத்தின் பொருட்டு எந்த தர்மங்களின் அனுஷ்டிக்க வேண்டிய முறையை ஸ்மிருதிமுதலான கிரந்தங்களால் வெளியிட்டிருக்கிறார்களோ; அவ்விதமஹிமை பொருந்திய ஆர்யதர்மத்தை எப்பொழுதும் அபிவிருத்தியடையும்படி செய்ய வேண்டுமாய் ஸ்ரீ பரமேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன். சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ரக்தாக்ஷி-ஹு தை-மீ ௩-உ

பத்தாவதாண்டு.

நம் பூலோகத்தில் விளங்கும் பலகண்டங்களுள் பரதகண்டமென்பது ஒன்று. இதை ஆர்யாவர்த்தம் என்றும் புண்ய பூமி என்றும் கொண்டாடுகிறார்கள், அதற்குக் காரணம் மானிடர்களனைவரும் இப்பிறவிப் பிணியையகற்றி நித்யமான சிறந்த பதத்தைப் பெறுவதற்கு முக்கிய ஸாதனமாய் விளங்கும் புண்ணியநதிகளாலும், பல தேவாலயங்களாலும், அநேக மஹான்களாலும் அலங்கரிக்கப்பட்டதேயாகும். காவேரி, கோதாவரி, யமுனை, ஸிந்து, தாம்ரபர்ணி, கங்கை, ஆதிஸேது முதலான எண்ணிறந்த புண்யதீர்த்தங்கள் நம் நாட்டைச்செழிப்பிக்கின்றன. சிவாலயம், விஷ்ணுவாலயம், கணேசாலயம், சுப்பிரமணிய ஆலயம், பகவதியின் ஆலயங்கள், நவக்கிரகங்களின் ஆலயம் முதலிய ஆயிரக்கணக்கான மஹிமைபொருந்திய தேவாலயங்களும் நம் தேசத்திற்றான் பிரகாசிக்கின்றன. உலகத்தில் தர்மப்பிரதிஷ்டாபனார்த்தமாயவதரித்த, ஈசுவராம்சமான ஸ்ரீராம, கிருஷ்ண, ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத் பாதாசார்யாள் முதலான மஹான்களும் நம் தேசத்திலேயே அவ்வக்காலங்களில் தோன்றி, துஷ்டர்களையும், துர்மதங்களையும் ஸம்ஹாரஞ்செய்து லோகத்திற்கு விசேஷ க்ஷேமத்தையுண்டுபண்ணி யிருக்கிறார்கள். வைதிக தர்மானுஷ்டானங்களிலதிக ஊக்கம் கொண்ட பலமஹான்கள் வேள்வி முதலிய சிறந்த கர்மானுஷ்டானங்களை நம் தேசத்திலேயே நடத்தித் தாம் சிறந்தபதவியைப்பெற்று,மற்றுமுள்ளோர்களையும் புனிதர்களாகச் செய்திருக்கிறார்கள். இம்மை மறுமை எனப்படும் இருவகை சுகங்களைப் பெறுவதற்கும் முக்கிய ஸாதனமாய் விளங்கும் சுருதி, ஸ்மிருதி, புராணம், முதலான பல அரிய சாஸ்திரங்களும் அநாதிகாலம் தொடங்கி இந்நாட்டிலேயே நன்கு பாதுகாக்கப்பட்டு, அனுஷ்டானத்திலும் உபயோகப்படுகின்றன. மிக

வும் பாபியானகலியின் கொடுமையால் நம்தேச க்ஷேமத்திற்கு இன்றியமையாத ஸாதனமாய் நிலைபெற்றிருந்த வர்ணாச்ரம தர்மங்களில் பலபாகங்கள் நடைபெறாமல் மறைந்துவிட்டாலும், அற்பமாகவாவது இன்னும் இங்குதான் ஆங்காங்கு அனுஷ்டிக்கப் பட்டுவருகின்றன. நிக்கிரகானுக்கிரக சக்தி வாய்ந்த பலபெரியோர்களின் வாஸத்தால் நம்தேசமே புண்ய பூமியாகச் செய்யப் பட்டதென்று தெரிகின்றது. இவைபோன்ற பலவித மஹிமை வாய்ந்த சிறந்த இந்த பாரதவர்ஷத்தில் ஜன்மாவையடைந்தும் பலர் நம்தேசத்திற்குள்ள பெருமையையும், சாஸ்திரங்களுக்குள்ள மஹிமையையும், முன்னோர்களுக்கிருந்த சக்தியையும், தற்காலம் நேர்ந்திருக்கும் வறுமையையும், தமக்குரிய கடமையையும் சற்றும் கவனியாமல் கலியரசன் ஆட்சிக்கீடுபட்டு பசு, பக்ஷிகளைப்போல் சகல நியமங்களையும் விலக்கிவிட்டு, ஆகாரவியவகாரங்களைத் தோன்றியவாறு நடத்தத்துணிந்து, பிறவிப்பயனை இழந்து, பாபத்திலமிழ்ந்து வீணில் நரகத்திற்கிரையாகிறார்களே என்று கவனித்துக் கருணைகொண்டு சகல ஜனங்களுக்கும் அவரவர்களுக்குற்ற ஸநாதன தர்மங்களை நன்கு போதித்து முடிந்தவரை அனுஷ்டிக்கும்படி செய்து, பாபத்தைவிலக்கி, சிரேயஸ்ஸைப் பெறும்படி செய்ய வேண்டுமென்கிற நோக்கத்துடன் கூடிய ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதிகளாகியஜகத்குரு ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்யரவர்களுடைய ஆக்ஞையை முன்னிட்டு சென்ற ராக்ஷஸ ௵ வைசாக சுக்ல பஞ்சமி முதல் தம் நோக்கத்திற்குற்றவாறு ஆர்யதர்மமெனப் பெயருடன் இப்பத்திரிகை ஒன்பது வருஷகாலமாய் வெளிவந்துலாவுகின்றதை நேயர்களறிந்திருக்கலாம். இனியும் ஸ்ரீ ஜகத்குருபரமாசார்யாளுடைய அனுக்கிரகத்தை முன்னிட்டு ஸகல சிரேயஸ்ஸிற்கும் மூலகாரணமான ஸநாதன தர்மஸூக்ஷ்மங்களை முறையே அந்தந்த அதிகாரிகளுக்குத்தக்கவாறு பிரமாண வசனங்களுடன் போதிக்கும் பொருட்டு வெளிவந்துலாவும் இப்பத்திரிக்கையை ஆஸ்திகர்கள் யாவரும் வாங்கிப்படித்து விஷயங்களை நன்கறிந்து அனுஷ்டிக்க முன்வந்து இவ்விஷயத்தில் எடுத்துக் கொண்டிருக்கும் எங்கள் முயற்சியையும் ஸபலமாகச்செய்யவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆர்யதர்மம்உபபத்திராதிபர்.

பருத்தியே இந்தியர்க்கு இன்றியமையாத உடை.

பருத்தியின் பெருமை.

நமது தேசத்து இந்து ஜனங்கள் பருத்திநூலாலுண்டான ஆடையையே பெரும்பான்மையாக உடுக்கின்றனர். அவ்வாடைகளின் ஆற்றல் அளவிலடங்காது. மற்றைப் புற்பூண்டுகளாலமைந்த கயிற்றினும் இப்பருத்தியாலமைந்த கயிறு தண்ணீர் முதலியவற்றால் அதிகம் பழகினும் வெகுகாலம் நிற்கும், தன்மை வாய்ந்தது. நற்பயனையும் வெகுவாய் பயக்குவது. அதிகமாய்த் தண்ணீர் படுவது இதற்கோர் நற்குணமாம். பட்டு முதலியவற்றில் சக்தி அதிகமாயினும் அவை தண்ணீர்பட தனது ஆற்றல் குன்றியொழியும். அங்ஙனமே தோல் மரப்பட்டைகள் இவைகளும் ஒழியுந்தன்மையினதே. இத்தேசத்தவர் பருத்தியை விசேஷமாய்க் கொண்டாடுவது அதன் மேம்பாட்டையறிந்தே. அப்பருத்திச்செடியின் பெருமை வருமாறு காண்க. அதன்வேர் மலக்கட்டை நிவர்த்திசெய்யும் அதன்காய் மலத்தைக்கட்டுவதுமன்றிச் சிலமூலரோகங்களுக்குங் கைகண்ட ஔஷதமாகும். அதன் மலர் நேத்திரரோகங்கள் பலவற்றிற்கு ஔஷதமாக உபயோகப் படுத்தப்படும். அதன் விதை கார்ப்பாஸாதி சூரணம் **(कार्पासादिचूर्ण)** என்னுமோர் சூரணத்திற்குத் தாய்ச்சரக்கு வயிற்றுப்பொறுமல், அரோசகம் முதலிய ரோகங்களில் பருத்திவிதை கைகொண்ட ஔஷதமென ஆயுள்வேதியர் கூறிநிற்பர். அங்ஙனம், அறுத்தல், காரம்வைத்தல் முதலிய அசுரசிகிச்சைகளிலும் (Surgery) ரசம் அல்லது மாமிசம் கெட்டு அதனால் புண் உண்டாய் மாமிசங்கரைந்து புறையுங்கண்டால் அதேமனிதன் தரித்திருந்தஉடையை நன்குதோய்த்து புறைகளிற் செலுத்தினால் அவைகள் காலத்தால் மாமிசமாவதைக் கண்கூடாகக் காணலாம் அன்றியும், சரீரத்தில் எங்காகிலும் கத்தி முதலியவை அறுத்து உதிரம்பெருக நேர்ந்தால் தண்ணீரில் நனைத்த பருத்திநூல் உடையை அவ்விடத்திற் சுற்றினால் உடனே அவ்வுதிரம் உறைந்து அறுந்தசதையும் சேரக்காணலாம்.

இவ்விதமே பருத்திவிதை பல ஔஷதங்களிற் சேருகின்றது வமனரோகத்தில் ஈரத்துணியை முகர்ந்தால் சொற்ப குணமுண்டு இதுவிஷயத்தில் அநுபவசித்தமான ஓர் கதையுமிருக்கின்றது. அதாவது:—

"அமெரிக்காவில் மந்திரதந்திரங்களினியல்பை அறியவேண்டுமெனக் கங்கணம்பூண்ட ஓர் வித்வானுண்டு. அவரூரில் ஒருவன் தடாகத்தில் வீழ்ந்து மரித்தான் அவன் பிரேதம் கண்ணிற்குப்புலப்படவில்லை இங்ஙனமிருக்க, அவன் உடுத்திய பருத்தி நூற்றுணியை எடுத்து அவ்வித்துவான் குளத்திலெறிந்தார். அது சிறிதுதூரம் விரைவாய்ச்சென்று ஓரிடம் அமிழ்ந்தது. உடனே அவ்விடத்தைச்சோதிக்கஇறந்தவன் பிரேதம் அகப்பட்டது பிறகு அவ்வித்வான் பருத்தியின் பெருமையை அறிந்தார்" என்னும் இச்சிறு கதையேயாம். எனவே பருத்தியின் பெருமை எத்தகையதென நன்கு வெளியாகின்றது.

மற்றைய உடைகள் பருத்தியைப்போல் நமது நாட்டிற்கு அவ்வளவு ஏற்றதல்ல.

புலித்தோல், மாந்தோல், பட்டு முதலியவைகளை யோகிகளும் துறவிகளுமே பெரும்பான்மையாக உபயோகிப்பது. அன்றியும் அவற்றை உபயோகிக்கவேண்டிய காலமும் நம்சாஸ்திரங்களில் வகுத்தோதப்பட்டுள்ளது அதன் காரணமும் கீழ்வருமாறு காண்க.

மாந்தோலென்பது மிகச் சாந்தமான சக்தியைக் கொடுக்கக்கூடியது. என்னையெனில், அம்மிருகமானது மிகவும் அற்பமான புல் முதலிய தழைகளைக்கொண்டே ஜீவிக்குமாகையால் அதன் தோல் சரீரத்திற்கு மிகவும் சாந்தத்தைப் பயக்கும். மாந்தோல் எவ்வளவு சாந்தமோ அவ்வளவு கடுமையுள்ளது புலித்தோல் மானிலும் புலிகடுமையுள்ளதென்பது இதனாலேற்பட்டது. இவ்விரண்டிலும் ஜந்துசக்தி (Animal Magrahion) அதிகப்பட்டும். அவ்வித ஜந்துசக்தி நிறைந்ததாயினும் அது ஊன் தண்ணால் நிறைவதாதலால் அதுதோலினும் மிகக்குறைந்ததே. ஆயினும் அதில் மின்சாரசக்தி (ElectricPower) அதிகம். கம்பளியும் அதைப்போன்றதே ஆடுகள் எல்லாவித பச்சிலைகளையும் தின்கின்றனவாதலால் அதன் சரீரத்திலுண்டாகும் ரோமம் பூர்ணசக்தி பெற்றதென்பதற்குத் தடைஎன்னை? இதன் பரீக்ஷையும் வருமாறு:— ஒரு கம்பளி யல்லது பட்டில் ஓர் ' அரக்குக்குச்சியை

த்தித்து சூடுகண்டவுடன் எடுத்து எள்ளளவுதுண்டாகக் கத்திரிக்கப்பட்ட கடுதாசியின்மேற் காட்டினுல் அக்கடிதத்துண்டுகளை அவ்வாக்கு இயக்கக் காணலாம். அவ்வளவு பெருஞ் சூட்டை விளைவிக்குமாதலால் கம்பளியும் பட்டும் இவ்வுஷ்ண தேசத்திற்கு எக்காலமும் தரிக்கமுடியாது. அதன் சக்தியும் வெகுகாலம் நிற்காது. தண்ணீர் சம்பந்தமுண்டானுல் அது ஒருவாறு கெட்டுப்போகும்.

பருத்திக்குத் தண்ணீர் சம்பந்தமே பெருங்குணமாம். அதுகொண்டே, பட்டுக்கம்பளிகள் அதிகக் கடுமையுள்ளவையாதலாலும், பலவித அபாயங்களால் அதன் சக்தி ஒழிந்துபோமாதலாலும், பருத்தி முதலியவற்றைபோல் மனிதருக்கு அதிக சுலபமாய்க்கிடைப்பது அரிதாதலாலும் என்றைக்கும் உபயோகமுள்ளது பருத்தியே எனத்தீர்மானிக்கப்பட்டது. நாம் முன்பே கூறியுள்ளபடி புலித்தோல் துறவிகளுக்கே உரியது. அவர்கள் சரீரத்தின் வீரியம் ஒருவாறு குறைந்தாலும் அதைப்பொருட்செய்யாது எக்காலும் உள்ஒளியிலேயே நாட்டத்துடன் தவம்புரியும் அவர்களுக்கதுஉசிதமே. பட்டுக்கம்பளிகளுக்குள், கம்பளி எக்காலத்திலுந்தரிக்கத்தக்க சக்தியுள்ளதாயினும், அது பருத்தியைப் போல்ஆகாது. தோல்கள்மயிர்உதிர்ந்தால் உதவா. அவையுள்ளகாலத்து அவைகளைக் காக்கும் சத்து இருத்தலாலென்க முற்கூறிய பருத்தி மரப்பட்டைகள் இவை மரமாவிருந்த பொழுதும் தோல் மிருகமாயிருந்தபொழுதும், வெளிமலங்களை இயக்குமியல்பினதாதலால் அது உருமாறியும் சரீரமலங்களை இயக்கவுஞ் செய்கின்றது. உயிருடனிருக்குங்கால் வெளிமலத்தை இயக்குவதுபோல் அதிலில்லாவிடம் உள்மலத்தை இயக்குமியல்பு அதற்குத் தொன்றுமென்பது கருத்து, பருத்தியையும் தோலுடன் நெருங்கத் தரித்தால் கெடுதி. குளிர்ச்சி மிகுதியால் உதிரம்உறையும். ஆகவே, பட்டு, கம்பளி, மாந்தோல், புலித்தோல் முதலியவைகள் உஷ்ண தேசமாகிய நமது நாட்டிற்கு பருத்தியைப்போல் அவ்வளவு ஏற்றதல்லவெனக் கண்டுதெளிக.

பி. வி. கணபதிசாஸ்திரி.

சிவபெருமான் மயானத்தில் குடிகொண்டு

விபூதியை யணிந்துகொள்வானேன்.

மறைகளாலும் இது காறுந்தேடப்படுகின்ற நித்யநிரதிசயரான பரமேசுவரன், அணிமாமுதலிய அஷ்டைச்வர்ய ஸம்பந்நராயும், மயானத்தையே மேம்பட்டதாகக் கருதி, பூதப்படைகள் தன்னைச் சூழ்வதினால் பேரானந்தங்கொண்டு, வெண்மை நிறமுள்ள பனி நீர் கர்ப்பூரம், கோரோசனை, முதலிய பற்பல பொருள்களிருப்பினும், அவைகளைப் பொருட்படுத்தாமல் பஸ்மாவையே ஸர்வாங்கமும் தரித்து மகிழ்ச்சி பெறுவதற்குத் தக்க காரணத்தை சிறிது வெளியிடுவதற்கு முன் வருகிறேன்· (भस भर्त्सन दीप्त्योः) என்ற धातुவிலிருந்து (भस्म) பஸ்ம என்ற பதம் ஏற்படுகிறது.

ரோகங்களையும், மாயாபாசத்தையும்வறுத்து ஞானத்திற்குச் சாதனமாயிருந்து, மோக்ஷத்தையளிக்குந் தன்மையுள்ளதால், பஸ்மா என்றபெயர்பொருளுள்ளதாகிறது.

पापं नाशयते कृत्स्नमपि जन्मशतार्जितम् ।

என்ற ஜாபால ச்ருதியில் கோடி ஜன்மாக்களால் தேடப்பட்ட ஸகல பாவங்களையு மொழித்து விடுகிறது என்று பஸ்மாவின் மஹிமைஅறிவிக்கப்படுகிறது.

उद्धूळनं त्रिपुण्ड्रं च मायापाशनिवृत्तये ।
आचरन्ति मुनिश्रेष्ठा अथर्वशिरसि स्थितम् ॥

என்ற பிரும்மோத்தரகாண்ட வசனத்தால், மாயாபாசங்களை யொழிக்கவே விபூதியை த்ரிபுண்டரமாய் தரித்தும், உத்தூளனம் செய்தும், முனிவர்கள், பலசித்தியடைவதாகத் தெரிகிறது. மேலும்,

भासनाद्भसितं प्रोक्तं भस्म पापस्य भर्त्सनात् ।
भूतिर्भूतिकरी पुंसां रक्षा रक्षाकरी पुनः ॥

என்ற, நாரதீய வசனத்தால், பாபங்களை யொழித்து ஞானத்தைப்பிரகாசப்படுத்தி, பூதாதிகளின் உபத்திரவத்தை நீக்கக் கூடிய ரக்ஷையாகவும்விளங்குகிறது என்று அறிவிக்கப்படுகிறது.

அவ்விதமான பஸ்மாவை முதன் முதலில் தான் தனது அங்கத்தில் தரித்துக்காட்டி, அதன்படியே ஏனைய பக்தர்களும் பஸ்மாவை தரித்து முக்தி பெறவேண்டும் என்றே பரமேசுவரன் கருதுகிறார்.

भास्वात्रिपुण्ड्रो भसितैःसितैस्सन्मौनी जटी वल्कलवान्मुकुन्दः ।
निरन्तरं चेतसि चन्द्रचूडं विचिन्तयन्पञ्च जजाप वर्णान ॥

என்ற ஹரிவம்ச வசனமானது, விஷ்ணுவானவர், பஸ்மதாரணஞ் செய்து, ஜடாவல்கல தாரியாய், மௌனத்துடன் சந்திர சூடனைத்தனது மனதில் நிரந்தரமாய் தியானித்துக் கொண்டு பஞ்சாக்ஷர ஜபஞ் செய்தார் என்று தெரியப்படுத்துகிறது.

ருத்ரபாஷ்பத்தில் அபிநவசங்கராசாரியாள்,

भसितकवाचितानां भस्मरुद्राक्षदाम्नाम् ।

என்று விபூதியை சரீரத்தை ரக்ஷிக்கிற கவசமாகவே கூறியுள்ளார். மேலும், பஸ்மாவைப் பூசிக்கொள்வதை, ஒன்பது விதமான ஸ்னானங்களில், ஆக்னேயஸ்னானமாக தர்ம நூல் அறிவிக்கிறது.

கல்பங்களின் முடிவில், முக்கண்ணனான ருத்திரன், தனது நெற்றிக்கண்ணை சற்றுத்திறக்கவே அதிலிருந்து கிளம்பின நெருப்பு உலகம் யாவையும் எரித்து நீராக்கவே பஸ்மம் ஒன்றே மீதியாய் நின்றது. ஆகையால் மின்னும் பின்னும் இறையிலும் எப்போதும் சேஷித்து நிற்பவர் சிவபெருமான் ஒருவரே யென்பதை விளக்கிக்காட்டும் அறிகுறியாய் நிற்பது பஸ்மம் ஒன்றேயாகையால், அதையே உமாஸஹாயனை பகவான் தனக்கு முக்கிய அடையாளமாகக் கொண்டார் என்று நூற்கள் அறிவிக்கின்றன. சுருக்கமாய் கூறுமிடத்து, பஸ்மாவானது ரோகம், பூதம், பிசாசம், விஷம் முதலியவைகளால் பீடிக்கப்படுகின்றவர்களுக்கு ஔஷதமாய் நின்று இன்பத்தை பயக்குகிற

துமல்லாமல், ஏனைய எண்ணிறந்த பாவங்களைப் பொசுக்கி ஞானவொளியையுண்டாக்கி மாயாவல்லியினின்று தப்புவித்து, மோக்ஷத்தையுமளிக்கிறது.

மேலும் பகவான் பிரதோஷகாலந்தொடங்கி, விடியற்காலம் வரை நடனஞ்செய்வதற்கு மயானத்தையே நர்த்தனசாலையாகக் கொள்கிறார். அஷ்டமூர்த்தியான எம்பெருமானுக்கு எவ்வுருவாலும் எங்கும் வியாபகராயிருத்தலால், அதற்குத் தக்கவாறே மயானவாஸமும் பொருத்தமுள்ளதே. தவிரவும் உலகத்தின் பயத்தையேயொழிக்கவல்லவரான பகவானுக்கு, பயலேசமில்லையென்பதற்கு அறிகுறியாகவே மயானத்தில் வஸிப்பதோடு பூதப்படையோடு சூழ்ந்து களிப்பதும் இயல்பே.

கற்பத்தின்முடிவில், சராசரரூபமான எவ்வுலகமும் பகவானுடைய நெற்றிக்கண்ணால் பொசுக்கப்படவே, அவ்விடம் மயானம் என்ற பெயராலன்றி வேறு எப்பெயரால் வழங்கத்தக்கதாகும்.

दग्धे तत्राक्षिदहनेन चराचरेऽस्मिन
त्वत्तोऽखिलं भुवनमेव महाश्मशानम् ।
तत्र स्थितिं विबुधनाथ तवासहायां
संतःश्मशानवसतिं समुदाहरन्ति ॥

என்று கீழ்கண்ட கருத்து, ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதரவர்களருளிய பிரும்ம தர்க்கஸ்தவ சுலோகத்தால் புலப்படுகிறது.

அஸ்திகளைத் தரிப்பதின் காரணம் என்ன ?

முன்னொரு காலத்தில் ஸோமகாஸுரன் வேதங்களை யபகரித்தபோது ஹரியானவர் மத்ஸ்யாவதாரம் எடுத்து, அவ்வசுரனைக் கொன்று, முன்போல் வேதங்களை ஸ்தாபித்து, அதனால் கர்வங்கொண்டு, சமுத்திரத்தைக் கலக்கிக்கரைமோதி எங்கும் பரவச் செய்யவே, ஆறுமுகக்கடவுளான கந்தபிரான் சிவனது கட்டளையால் அவருடைய கொட்டத்தையடக்கினார். அப்போது ஹரி

யானவர், தனதுகண்ணோத்திலுள்ள எலும்புகளையடையாளமாய் அணிந்து கொள்ளும்படி பரமசிவனை வேண்டவே, பகவான் கருணை கூர்ந்து அணிந்து கொண்டார்.

மற்றும் ஒருசமயம் ஸ்ரீமந் நாராயணன் கூர்மாவதாரம் எடுத்து மந்தரமலையைத் தாங்கி, அக்கர்வத்தால் கடலைத் துன்பப்படுத்தவே, ஸ்ரீ கணபதி அவரைக்கண்டித்தார். அப்போது தனது முதுகு எலும்பை பரமேச்வரனுக்குக்கொடுத்து பெருமாள் மனச் சமாதானங்கொண்டார்.

பின்பு ஒருசமயம் வராஹாவதாரத்தில், வீரபத்திராலும், நரஸிம்மாவதாரத்தில் சரபராலும், த்ரிவிக்ரமாவதாரத்தில் ஆகாச பைரவராலும் சிக்ஷிக்கப்பெற்ற திருமால், தித்திப்பல், தோல் வீணாதண்டம், இவைகளை உமாகாந்தனுக்கு ஸமர்ப்பித்து சந்தோஷங்கொண்டார். மறுபடியும், ஒருகல்பத்தின் முடிவில் சிவபெருமான் சடையினின்று பெருகிய கங்கையில் அஸ்திகளைப்போடுவதால் யாவரும் மோக்ஷத்தை யடைவதை யுணர்ந்து தேவர்கள் தமது அஸ்திகளையாபரணமாக அணியும்படி சிவபெருமானை வேண்டவே அவைகளையும் பகவான் ஏற்றுக்கொண்டார். இவ் விஷயங்கள், சங்கரஸம்ஹிதை ஸநத்குமாரஸம்ஹிதை இவ்விரண்டிலும் நன்கு புலப்படுகின்றன.

ஸநத்குமாரஸம்ஹிதையில் வியாஸரைப்பார்த்து பரமேச்வரன் வசனித்த ச்லோகங்கள்.

मदङ्गस्वेदसम्भूतौ ब्रह्मनारायणाविमौ ।
यस्त्वया च सदा विष्णुस्स्तूयते नियतात्मना ।
पश्यासौ सर्वकार्याणि त्यक्त्वा मामेव सेवते ॥
अनेकमुण्डकोटीभिरियम्माला शिरोगता ॥
ब्रह्मणश्च कपालानि विनष्टस्य युगे युगे ।
मत्स्यकूर्मवराहाणां नारसिंह्माजिनं मम ।

वामनस्य चक्रं काळदण्डम्मम करे धृतम् ॥
याश्चामूरपरा माला ग्रीवाहस्तकटिस्थिताः ।
नारायणस्य तनवो विनष्टस्य युगे युगे ॥
मत्स्याक्षिकूर्मपृष्ठास्थिदंष्ट्रां वाराहसम्भवाम् ।
ममांगे तानि पश्याद्य शिक्षितानां युगे युगे ॥

இதனுல் பிரும்மவிஷ்ணு முதலான ஸகல தேவர்களும், சிருஷ்டியின் துவக்கத்தில் உமாஸஹாயனுன சிவபெருமானிடத்திலிருந்து ஆவிர்ப்பவித்து, லோகாக்ஷணஞ்செய்து முடிவில் சிவபெருமானிடத்திலேயே லயப்படுகின்றனர் என்பது விளங்குகின்றது.

ஸகல ச்ருதீதிஹாஸ புராணங்கள்யாவும் பரமேச்வரனே ஸர்வ காரணம், ஸர்வேச்வரன், பூர்ணன், என்று முறையிடுகின்றன. வேதங்களை நன்கறிந்து, ஸகல சாஸ்திரங்களையும் உபதேசிக்கும் சதுர்முகனும், ஸகல மறைகளால் ஸித்தமான எம்பெருமானின் மஹிமையை மறைக்கவல்லவராகார்.

இக்கருத்தை ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதரவர்கள் ஆத்மார்ப்பணத்தில் ஒரு செய்யுளால் வெளியிடுகின்றனர்.

आलेपनं भसितमावसतिः श्मशानं
अस्थीनि ते सततमाभरणानि सन्तु ।
निह्नोतुमीश सकलश्रुतिपारसिद्ध-
मैश्वर्यमम्बुजभवोऽपि च न क्षमस्ते ॥

ஆகையால் ஸகலபுருஷார்த்தங்களையும் அடியார்களுக்கு அளிக்கவல்லவரான பரமேச்வரனை நாம் எப்போதும் மனோவாக்காயங்களால் பஜித்து முக்திபெற முயலவேண்டும். பகவானுடைய பிரஸாதத்தைப் பெறுவதற்குச் சாதனங்களைத் தேடவேண்டும்.

எண்சாண்வயிற்றை வளர்க்கக்கருதி, அற்பப்பிரபுக்களை நாடி அவரவர்கட்குத் தக்கவாறு நடந்து படாதபாடுபடுகிறோம். இப்பிறவியிலும் நம்மைக்காத்து எப்பிறவியுமே தவராது காக்க வல்லவரான பரமேச்வரனை சிறிதுநேரமேனும் சிந்தியாமல், காலத்தை வீணுக்குகிறோம்.

வர்ணுசிரமங்களை விதிப்படி நடத்தி, பகவானுக்குப் பிரியகரமான விபூதியையும், ருத்திராக்ஷத்தையும் அணிந்து, சிவனடியார்களை நேசித்து, சிவபுராணங்களை யாராய்ந்தறிந்து, மற்றதேவதைகளிடத்தில் துவேஷத்தை விட்டு ஸகலமும் சிவமயம் என்று நன்கறிந்து, உமாஸஹாயனான சங்கரனுடைய பிரஸாதத்தையடைவதற்கு முயல்வோமாக.

K. V. சுப்பிரமணியசாஸ்திரீ.

"சகோதர மதம்" என்றால் என்ன?

ஆரியப்பெரியார்க்கு ஒரு விண்ணப்பம்.

இப்பொழுது உலகெங்கும் நடைபெறுகின்ற கிளர்ச்சியில் ஈடுபட்ட பெரியார் யாவரும் "ஸ்வதந்தரம், ஸமத்வம், ஸஹோரத்வம்" என்ற மூன்று மஹாமந்த்ரங்களை இடைவிடாதுஜபித்து வருவதை எல்லோரும் நன்கறிவர். ஸ்வதந்த்ரம் என்றால் எவ்விதக் கட்டுப்பாடு மின்றிய விடுதலையாம். உலகிலுள்ள மனிதர் யாவரும் சகலப் பிராணிகளும் தமக்குச் சமமான கௌரவத்தோடு வாழவேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கியது ஸமத்வமொழி! எல்லா உயிர்களும் ஒரே ஈசனால் ப்ரக்ருதி தேவியின் துணை கொண்டு ஸ்ருஷ்டிக்கப் பட்டமையின் உயிர்கள் யாவும் - மனிதர் யாவரும் - ஆண் பெண் அடங்கலும் ஸகோதர ஸஹோதரிகள் என்பதே மூன்றுவது முத்ராவாசகத்தின் தத்வார்த்தம். இந்த அர்த்தத்தைக் குறித்து நாம் விவாதம் செய்யவிரும்பவில்லை. ஆனால், மரீச்யாதி மஹர்ஷிகளைப்படைத்த ப்ரஹ்மதேவருக்கும், ஸநகாதி முனிவருக்கும் இனி (முறை

யே ப்ரவர்த்தி மார்க்கத்திற்கும் நிவர்த்தி மார்க்கத்திற்கும்) ஒழிவு கொடுக்க வேண்டியது தானா என்ற ஸந்தேகம் நமக்கு உண்டாகின்றது! இந்த கிளர்ச்சிக்காரர்கள் பிரஸங்கமேடைகளில் தோன்றி "ஸகோதரர்களே! சகோதரிகளே! ஒரே கடவுளால் படைக்கப் பட்ட நாம் யாவரும் சகோதரர்களன்றோ? இந்த சகோதரமதத்தை (கொள்கையை) உலகெங்கும் கொண்டாடுவதற்காக ஜனவரிமாதம் முதல் வாரத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த வாரத்தில் நமது பிரசாரகர்கள் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று நமது நவீன மதத்தைப் பிரசாரம் செய்வதற்குப்போதுமான பணவசூல் செய்யவும், அந்தத் தொகையைக்கொண்டு சிறுவர் சிறுமிகளுக்குச் சிற்றுண்டிகள் மிட்டாய் முதலியன விநியோகஞ் செய்யவும் கட்டுப்பாடாக வேலை செய்யவேண்டும்" என இந்த மஹாநாடு தீர்மானிக்கின்றது, என்பதாகப் பலர் பிரசங்கித்துத் தீர்மானிப்பதும் அதன் வண்ணம் கிளர்ச்சி செய்தலும் வழக்கமாக இருக்கின்றது. தமக்கும் மேற்பட்ட எல்லாம் வல்ல கடவுள் ஒருவரிருக்கிறார் என்ற கொள்கையாவது; ஜாதி, மதம், ஆண் பெண் என்ற வேற்றுமையாவது இந்த சகோதர மதத்தில் பிரவேசியாது. அப்படியானால் இந்த சகோதரப் பிரசங்கிகள் தமது பெண் பிள்ளைகளுக்கு விவாஹ முதலிய சம்பந்தம் எவரோடு செய்வது? சகோதரர்க்கு சகோதரரின் பெண்ணைக் கொடுப்பதா? சகோதரிக்கு சகோதரர் கணவனாவதா? யோசித்துப்பார்த்தால் இந்த சகோதர மதத்தின் கொள்கையின் முடிவு தெளிவாக விளங்கவில்லை. இந்த சகோதரமதப் பிரசாரஞ் செய்வோரும் "வேதங்கள், கீதாவசனங்கள், புராணங்கள் இதிஹாஸங்கள்" முதலிய ஹிந்து மதப் பிரமாண நூல்களையும் தமது கொள்கைக்கு ஆதாரமாகக் கூறுகின்றனர். இவர்களுக்கு "வேதங்களிலும் கீதையிலும் சிறிதுபாகமே பிரமாணமா, முற்றும் பிரமாணமா?" என்பதும் எமக்குப் புலப்படவில்லை. இந்தப் பெரும் ஸந்தேஹத்தை நமது ஸஹோதர அறிஞர்கள் இவ்வார்யதர்மத்தின் வாயிலாக விளக்கும் வண்ணம் வேண்டுகின்றேன்.

ஜானகீ ஜானி:.

லௌகிக விசாரம்.

(பாரதீபுத்திரன்)

புராதனகலாஸம்மேளனம்—(The Oriental Conference சென்ற டிசம்பர் மாத மத்தியில் சென்னை ஸர்வகலாசாலை (University) மண்டபத்தில் ஓர்மஹாஸம்மேளனம்கூட்டப்பட்டது. நமது மாகாண அதிபதியான வைகௌண்டு கோஷன்பிரபு இந்த மஹாஸம்மேளனத்தை அலங்கரித்தது ஓர் விசேஷஸம்பவமாகும். மஹாஸபைக்கு அக்ராஸனம் வஹித்த ப்ரயாகை வாஸியான மஹாமஹோபாத்யாய ஸ்ரீயுத கங்காநாத்ஜா புராதன நவீனகல்வி முறைகளில் மிகவும் தேற்சிபெற்றவர். அவர் தனது அக்ராஸனப்ரஸங்கத்தில் நமது நாட்டின் எல்லா பாகங்களிலும் கையினால் எழுதப்பட்ட அபூர்வமான கிரந்தங்கள் பல சிதறிக்கிடக்கின்றனவென்றும் அவைகளைப் பத்திரப்படுத்துவது முதற்கார்யமென்றும் பின் அவைகளை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றும் அவ்விதம் ஆராய்ச்சி செய்யும் காலங்களில் பிறருடைய அபிப்பிராயங்களையே ஆதாரமாகக்கொண்டு உண்மைப் பொருளின் அர்த்தங்களை மறந்துவிடலாகாதென்றும் நமது நாட்டுச்செல்வம் பண்டிதர்களாதலால் நமது நாகரீகத்திற்கும் அவர்களே இன்றியமையாதவர்களாகிறார்களென்றும் பரீக்ஷைகளால் பண்டிதர்களென்பது தப்பு அபிப்பிராயமென்றும் ப்ராசீன முறையில் வித்யாப்யாஸம் செய்த பண்டிதர்களை அவச்யம் ஆதரிக்கவேண்டுமென்றும் கூறினார். இவரது பிரஸங்கத்தை நமது நாட்டு தனவந்தர்களும் கவர்ன்மெண்டாரும் சிரத்தையுடன் கவனித்து அதன்படி நடந்துகொள்வார்களானால் நமதுநாட்டின் புராதன நாகரீகம வெளியாகும்.

கற்றறிந்த பலர் இந்த மஹாஸபைக்கு விஜயம் செய்ததும் அவர்களை நிர்வாககர்கள் ஆதரித்ததும் மிகவும் பாராட்டத்தக்கது.

தர்மஸ்தாபன மசோதா— ராஜப்ரதிநிதியான ரீடிங் பிரபு இந்த மசோதாவிற்கு ஸம்மதம் அளித்துவிட்டதைக்கேட்டு அவரிடம் நம்பிக்கை வைத்திருந்த லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஏமாற்றமடைந்துவிட்டார்கள். சென்ற 1923-வது ஜூலை-மீ ஸிம்லாவில் நமது பிரதிநிதிகள் அன்னவரை பேடிகண்டு பேசிய கால

த்தில் அவர் சொன்ன பதிலிலிருந்து இவ்வளவு லளிதமாக இதை நழுவவிடுவார் என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. இம்மாதவாரம்பத்தில் அவர் வெளியிட்ட ஓர் செய்தியில் இந்த சட்டத்தில் எவ்வளவோ குறைகள் இருக்கின்றனவென்றும் தான் வெகுகாலம் யோஜித்துப்பார்த்ததாயும் ஏதாவது ஒருமாதிரியாக சென்னை சட்டசபையிலேயே இதற்கோர் திருத்தசட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளும்படிக்கும் நமக்கு யோஜனை கூறியிருக்கிறார். மதவிஷயங்களை விசேஷமாய் பாதிக்கக்கூடியதும் தேசத்தின் எல்லா பாகங்களிலும் குறைகூறப்பட்டதுமான இந்தமசோதாவை பூருவாகவோ சிலவற்றையோ நிராகரிக்கும் அதிகாரத்தை உபயோகிக்க ஸந்தர்ப்பம் எடுத்துக்கொள்ளாததோடு தனது மனஸ்ஸாக்ஷிக்கும் விரோதமாக ராஜப்பிரதிநிதி நடந்துகொள்ளவேண்டிய அவச்யம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. சக்கிரவர்த்தியின் பிரதிநிதியான வைஸராயிடம் முறையிட்டுக்கொண்டும்நியாயம்பிறக்காத இந்தச் சட்டத்திற்கு சட்டம் ஜனித்தவிடமாகிய சென்னை சட்டஸபையிலா மறுபடி நியாயம் பிறக்கும்? சென்னை சட்டஸபையின் மந்திரி கக்ஷியாரின் மனப்பான்மையை நாம் எல்லாரும் நன்கறிவோம். இனி செய்யவேண்டிய கார்யம் மஹாஜனங்களைப் பொருத்ததாகவிருக்கிறது. இந்த சட்டத்திலுள்ள பாதகமானஅநேக விஷயங்கள் அமுலுக்கு வராமலிருக்கவேண்டி நாம்ஒவ்வொருவரும் நியாயமான மார்க்கத்தில்ஸாவதானமாய் முயற்சியெடுத்துக்கொள்ளவேண்டும்.

மான்யபண்டிதர்— சென்னை மைலாப்பூர் ஸம்ஸ்கிருத கலாசாலையின் அதிபரும் மஹாவித்வான் திருவிசலூர் மஹாமஹோபாத்யாய ராமசுப்பா சாஸ்திரிகளின் சிஷ்யரும் நமது ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம் ஆஸ்தானத்தின் முக்ய பண்டிதருமான 'பிரும்மஸ்ரீ வெங்கிடஸுப்பா சாஸ்திரிகள் அவர்களுக்கு அரசாங்கத்தார் " மஹா மஹோபாத்யாயர் " என்னும் கௌரவத்தை அளித்திருக்கிறார்கள். விசேஷ பாண்டித்யமும் அனேக சிஷ்யவர்க்கங்களையு மடைந்திருக்கும் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்குப் பல வருஷங்களுக்கு முன்பே கிடைத்திருக்கவேண்டிய இந்தப் பட்டமானது அவருடைய சிஷ்யகோடிக

ளுக்கும் அபிமானிகளுக்கும் மிகுந்த ஸந்தோஷத்தை ஏற்படுத்துவதுடன் அவர் ஸ்வக்ராமமான திருவிசலூரின் பூர்வீககௌரவத்தையும் நிலை நாட்டுகின்றது.

கோஹத் ஹிந்துக்கள்—வடமேற்கு எல்லைப் புறத்திலுள்ள கோஹத் என்னும் ப்ரதேசத்தில் ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் நடந்த கலகத்தின் பலனாக ஹிந்துக்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களை விஸ்தாரமாக சென்ற வருஷத்திய 35-வது ஸஞ்சிகையில் எழுதியிருக்கிறேன். அவர்களுக்கு உதவ பண வசூல்செய்யவேண்டி வட இந்தியாவிலிருந்து லாலாலஜபதிராய் ஸ்ரீயுத புருஷோத்தமதாஸ் தாண்டன் இவர்கள் நமது மாகாணத்திற்கு வந்திருக்கிறார்கள். தற்காலம் செட்டிநாட்டில் விஜயம் செய்திருக்கும் ஜகத்குரு ஸ்ரீமத் பரமாசார்யாள் பரம கருணையுடன் கோஹத் ஹிந்துக்களுக்கு அன்னவஸ்திரங்களுக்காக 500 ரூபாய் உபகரித்திருக்கிறார்கள். மதபக்தி, தேசபக்தி இவைகள் சிறிதளவாவது இருக்கும் ஒவ்வோர் ஹிந்துவும் கோஹத் ஹிந்துக்களைக் காப்பாற்ற தன்னாலியன்ற உதவி செய்யவேண்டுவது அத்யாவச்யமாகும்.

ஸ்ரீஜகத்குருவித்யாஸ்தானங்கள்— ஸ்ரீஜகத்குருபரமாசார்யாளுடைய ஆக்ஞையின் பேரில், திருவானைக்காவல், மாயவரம் நன்னிலம்தாலூகா தலையூர், சீர்காழித்தாலூகா குன்னம், சேங்காலிபுரம் முதலியவிடங்களில் வேதபாடசாலைகளும், சாஸ்திர பாடசாலைகளும் நடந்துவருகின்றன. மாயவரம், திருவானைக்காவல் இவ்விடங்களில் நடைபெற்றுவரும் பாடசாலைகளில் வித்யாப்யாஸம் செய்யும் பிரும்மசாரிகளுக்கு சில வருஷங்கள் வரை விவாஹம் செய்துவைப்பதில்லையென்று பெற்றோர்களிடமிருந்து நிபந்தனை வாங்கப்பட்டிருக்கிறது. முற்காலகுருகுலங்களில் பிரும்மசர்யவ்ரதம் எவ்விதம் அனுஷ்டிக்கப்பட்டதோ, அவ்விதம் அநேகவிதங்களான விதிவிலக்குகளுடன் பிரும்மசாரிகள் நியமாத்யயனம் செய்து வருகிறார்கள்.

வேதங்கள் ஓங்க உலகமெல்லாம் ஓங்கும்.